ஆண்டு அறிக்கை 2019

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01		அறிமுகம்	
	1.1	தொலைநோக்கு செயற்பணி மற்றும் தரக் கொள்கை	01
	1.2	தாபனத்தின் கட்டமைப்பு	02
அத்தியாயம் 02		மூலோபாயச் செயற்றிறன்	
	2.1	தலைவரின் செய்தி	03
	2.2	பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	04
	2.3	செயல் திட்டம்	11
அத்தியாயம் 03		ஆளுகை மற்றும் ஊதியம்	
	3.1	சபையின் விடயங்கள்	13
	3.2	முகாமைத்துவச் சபை	13
	3.3	முகாமைத்துவக் குழு	14
	3.4	உள்ளகக் கணக்காய்வுகள்	15
	3.5	ஊதியம்	16
அத்தியாயம் 04		செயற்றிறன் சிறப்பம்சங்கள்	
	4.1	தொழில்நுட்பக் கைமாற்றங்கள்	17
	4.2	ஆராய்ச்சி, முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம்	18
		4.2.1 தொழில்நுட்ப முன்னேற்றம	19
		4.2.2 கைமாற்றத்திற்குத் தயாரான தொழில்நுட்பம்	21
	4.3	தொழில்நுட்பச் சேவைகளில் முன்னேற்றங்கள்	22
	4.4	உட்கட்டமைப்பின் முன்னேற்றம்	23
	4.5	தேசிய பிரச்சினைகளுக்கான பங்களிப்புகள்	24
	4.6	தேசியத் திட்டங்களுக்கான பங்களிப்புகள்	25
	4.7	மனித நலனுக்கும் மற்றும் சமூக-பொருளாதார	26
	4.8	புதிய முன்னெடுப்புகள்	29
	4.9	கூட்டுமுயற்சிகள்	30
அத்தியாயம் 05		தீழ்ப்பினை கண்காணித்தல் மற்றும் தணித்தல்	
	5.1	கழிவுநீர் பரிகரிப்பு	32
	5.2	வளி தீழ்ப்புக் கட்டுப்பாடு	32
	5.3	இரைச்சல் கட்டுப்பாடு	33
அத்தியாயம் 06		நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி	
	6.1	தொழில் புள்ளிவிபரங்கள்	34
	6.2	தர உத்தரவாதம்	38
	6.3	தகவல் சேவைகள்	38
	6.4	விருதுகள்	39
	6.5	ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல்	39
	6.6	கடல்கடந்த பயிற்சி செயற்றிட்டங்கள்	40
	6.7	கை.தொ.நி.இன் நல்வாழ்வு	42
	6.8	மேம்படுத்தல் நிகழ்வுகள்	43
அத்தியாயம் 07		நிதிசார் செயல்நிறைவேற்றம்	
	7.1	கணக்காய்வு அறிக்கை	44
	7.2	நிதிசார் அறிக்கை	
அத்தியாயம் 08		ஆராய்ச்சி விளைவுகள்	
	8.1	4ஆவது இருபதாண்டு ஆராய்ச்சி ஆய்வரங்கு	47

8.2 வெளியீடுகள் 47
8.3 தொடர்பாடல்கள் சர்வதேசம் 47
8.4 நூல்கள், நூல் அத்தியாயங்கள் மற்றும் வழிகாட்டல்கள் 52
8.5 ஆக்கவுரிமைகள் 52
8.6 விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஆக்கவுரிமைகள் 52
நிறைவேற்றுப் பணியாளர் 53

அத்தியாயம் 01: அறிமுகம்

1.1 தொலைநோக்கு செயற்பணி மற்றும் தரக் கொள்கை

தொலைநோக்கு

தேசிய அபிவிருத்திக்கு விஞ்ஞானம் மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியில் திறமையின் நிலையமொன்றாக விளங்குதல்.

செயற்பணி

இலங்கை மக்களின் நன்மைக்காக துரிதப்படுத்தப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திக்காக புத்தாக்க ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும் நடத்துதலும் அத்துடன் சர்வதேசரீதியில் போட்டிக்குரிய தொழில்நுட்ப சேவைகளை வழங்குதலும்.


தரக் கொள்கை

ISO/IEC 17025:2017 மற்றும் ISO 9001: 2015 ஆகிய தரங்களுக்கும் அத்துடன் தேசிய தரக் கொள்கைக்கும் இணங்கும் விதத்தில், வாழ்க்கைத்தொழில் செயற்பாடுகளுக்கும் மற்றும் தர நோக்கங்களைத் தாபிப்பதன் மூலமும், மதிப்பாய்வதன் மூலமும் தொடர்கின்ற அபிவிருத்தியின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் அதன் செயற்பாடுகளின் தரத்திற்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உச்சநிலை முகாமைத்துவம் தடங்கலின்றி அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.

சேவைகளின் தரம் ஒருபோதும் இணக்கப்படுவதில்லை என்பதுடன், தரத்திலான முகாமைத்துவ முறைமைகளைப் பேணுவதன் ஊடாக வாடிக்கையாளரின் திருப்தியை ஆகக்கூடுதலான மட்டத்திற்கு சாதிப்பதற்கும் அத்துடன் குறிப்பிடப்பட்ட முறைகளுக்கும் அத்துடன் வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க அதன் வாடிக்கையாளர்களுக்கு சுதந்திரமானதும் பாரபட்சமற்றதுமான உண்மையான தரவுகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் சகல பணியாளரும் முயற்சிக்கின்றனர்.

தமது பணியில் சகல கை.தொ.நி. பணியாளரும் தர ஆவணப்படுத்தலுடனும், அமுல்படுத்தப்படும் கொள்கைகளுடனும் அத்துடன் நடைமுறைகளுடனும் தகுதியைக் கொண்டுள்ளதுடன் எனவே, தர முகாமைத்துவ முறைமைகளின் பயனுறுதித்தன்மையை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்பையும் கொண்டுள்ளனர்.

1.2 தாபனத்தின் கட்டமைப்பு



அத்தியாயம் 02: மூலோபாயச் செயற்நிறன்

2.1 தலைவரின் செய்தி

2019 ஆம் ஆண்டில் கை.தொ.நி.இன் தலைவராகப் பணியாற்றியதை நான் பெருமையொன்றாகக் கருதுகிறேன். தகவல் தொழில்நுட்பத் (த.தொ.) துறையில் இருந்து வந்த எனது செயற்பணியானது, அடுத்த தலைமுறையின் தொழில்மயமாக்கல் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய கைத்தொழிலை இயக்குவதாகவே இருக்கும்.

கைத்தொழில்கள் முழுவதும் உயர்நிலையிலான சோதனை, சூழல் சேவைகள் ஆகியவற்றை வழங்குவதன் மத்தியில் உணவு, மூலிகை மற்றும் பொருள்-சார்ந்த கைத்தொழில்கள் ஆகியவற்றில் தனித்துவமான தொழில்நுட்பங்களை முன்னேற்றுவதற்கான அபரிதமான திறன்களுடனும் மற்றும் ஆற்றல்களுடனுமான நிறுவனமொன்றே கை.தொ.நி. ஆகும். ஓர் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நிறுவனத்திற்கு அப்பாற்பட்டதாகவும் அத்துடன் இலாபகரமான முயற்சியொன்றாகவும் இருப்பதற்கு வணிகக் கண்ணோட்டத்தையும் அத்துடன் வணிகமயமாக்கல் மனநிலையையும் கொண்டு வருவதற்கு நாட்டின் உயர்மட்ட விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு புகழ்பெற்ற நிறுவனத்திற்கு பங்களிக்க முடிந்ததையிட்டு என்னை நான் பாக்கியமாகக் கருதுகிறேன்.

உலக சந்தையைப் பூர்த்திசெய்யும் திறனுடன் உள்நாட்டுப் பயிர்களுக்கும் மற்றும் அவற்றின் உற்பத்திக்கும் மதிப்புக் கூட்டலைக் கொண்டுவரும் விஞ்ஞானம், ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம் அத்துடன் வணிகமயமாக்கல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதில் தாபனத்தின் ஆற்றலளவு குறைவானது அல்ல.

2019ஆம் ஆண்டில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் எதிர்பாராததும் மற்றும் துரதிர்ஷ்டவசமானதுமான சம்பவத்துடன் கூட, கை.தொ.நி.இனால் அதன் வருவாயை 10 மில்லியன் ரூபாய்க்கு மேல் உயர்த்த முடிந்தது. கார்கில்ஸ் குவாலிட்டி கன்.்பெக்ஷனரிஸ் (பிரைவேட்) லிமிட்.க்கு குறைந்த அளவு சுக்ரோஸ் சேர்க்கப்பட்ட சத்தான ஸ்கோன் மற்றும் கீல்ஸ் .்பூட் புரடக்ட்ஸ் PLCக்காக உள்நாட்டில் விளைந்த அரிசித் தானியங்களைப் பௌதீகரிதியாகப் பரிகரிப்பதன் மூலம் ஒரு புதுமாற்றத்திலான முன்னேற்றமொன்றான Ezy அரிசி என்ற உடனடி அரிசி ஆகியவற்றின் இரு முக்கிய தொழில்நுட்பக் கைமாற்றங்களை எம்மால் வெற்றிகரமாக செய்ய முடிந்தது. அதே நேரத்தில், அனைத்து வழங்கல்களிலும் SMEகளை மேம்படுத்தவும் அத்துடன் நிலைநிறுத்தவும் பல குறைந்த ஆகுசெலவிலான தொழில்நுட்பக் கைமாற்றங்கள் இருந்தன.

CKDஐ ஒழிக்கும் ஒரு களிமண் வடிகட்டியை கை.தொ.நி.இன் பொருள் பிரிவு உருவாக்கியுள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும். அந் நேரத்தின் போது உற்பத்தியை மேம்படுத்தி, இயற்கையாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை நுகர்வதற்காக அலங்கார வடிவங்களில் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேறு பொது இடங்கள் மற்றும் தனியார் துறையில் கூட என நாடு முழுவதும் அதை கிட்டச்செய்வதற்கும் நாம் அந்நேரத்தில் முயற்சித்தோம். தப்ரோபேன் இன்டர்நேஷனல் லிமிடெட் உடன் இணைந்து, தென்னை நார் மரச்சோறு அடிப்படையிலான பொருட்களையும் மற்றும் அதன் பிரயோக உற்பத்திகளையும் விருத்திசெய்கின்றதும், கைமாற்றுகின்றதுமான சவாலை ஏற்றுக்கொண்டது.

இன்று வரை கை.தொ.நி.ஆல் மேற்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த மதிப்புமிக்க கருத்திட்டமான அக்ரி தேஷியா (பிரைவேட்) லிமிடெட் உடன் மதுசாரத்திலான கித்துல் குடிபானம் (சுடர்விடுகின்ற இனிப்புக் கள்ளு) மற்றும் கித்துல் வடிதாரை ஆகியவற்றின் சாதனையிலான கருத்திட்டத்தின் ஓர் அங்கமாக எனது பதவிக் காலத்தின் போது நான் இருந்ததையிட்டு பணிவுடன் பெருமைப்படுகிறேன்.

எனது நியமனத்திற்காக கௌரவ அமைச்சர் சுஜீவ சேனசிங்க அவர்களுக்கு நான் நன்றி கூறும் அதே வேளை, கை.தொ.நி.இன் தரத்தை உயர்த்துவதற்கு அதிக பங்களிப்பை வழங்கிய

தனியார் துறையின் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஓர் ஆற்றல்மிக்க சபையையும் நாம் கொண்டிருந்தோம்.

பணியாளர்களுக்கு ஆதரவாக மட்டுமல்லாமல், தேவைப்படும் நேரங்களில் அவர்களுக்கு உதவுவதற்காகவும் நலன்புரிச் சங்கத்தை ஆதரிப்பதன் மூலம் அனைத்து ஊழியர்களின் நுணுக்கமான விவரங்களை நாங்கள் கவனித்துடன், குறிப்பாக ஒரு பணியாட் உறுப்பினரின் மருத்துவத் தேவைகளுக்கு நிதியளிப்பதற்காக மேடை நாடகத்தை ஏற்பாடு செய்தமை ஒரு தருணமாக விளங்குகிறது.

பாலின சமத்துவம் பற்றிய விவாதங்கள் நிறைந்த உலகில், கை.தொ.நி.இன் சிரேஷ்ட விஞ்ஞானிகளாகவும் மற்றும் நிர்வாகத்தினராகவும் பெண்களே பெரும்பான்மையாக உள்ளனர். ஏப்ரல் 2019இல் முதலாவது DG/CEOஆக கலாநிதி ராதிகா சமரசேகர நியமிக்கப்பட்ட அதேவேளை, கலாநிதி இல்மி ஹேவஜுலிகே, கலாநிதி இரேஷா கோட்டேகொட, Ms. மனோரி விஜேமான்ன, பொறியியலாளர் Ms. ரம்யா விஜேசேகர, கலாநிதி மேனுகா அரவ்வாவல மற்றும் Ms. ஹிமாஷி கருணாரத்ன ஆகியோர் கை.தொ.நி.இன் பொறுப்புகளை சுமந்த பலரின் மத்தியில் உள்ளனர்.

தமது குழாம்களுடன் நிறுவனத்தின் உண்மையான தொலைநோக்கினை நோக்கி நெருக்கமாக பணியாற்றிய பெயரிடத்தக்க ஒரு சிலரில் முன்னணியில், கலாநிதி பத்மசிறி ரணசிங்க, கலாநிதி ருவன் வீரசிங்க, கலாநிதி சுதர்ஷன சோமசிறி, கலாநிதி நெவில் அமுனுகம, திரு. எம்.என்.ஏ.முபாரக், திரு.ருவன் சந்திமா, திரு. தினேத் சமரவிக்ரம மற்றும் திரு.அநுர சூரியஆரச்சி ஆகியோர் விளங்குகின்றனர். மேலும் கை.தொ.நி. பணியாளர்களின் நல்வாழ்வுக்கான Ms. ரோஹினி டி சில்வா மனக்குறைதீர்க்கும் குழுவின் தலைவராக இருந்ததுடன், நடுநிலைமையாக மதிப்பீடு செய்து உண்மையான கண்டுபிடிப்புகளையும் மற்றும் தீர்வுகளையும் அறிக்கையிட்டார். என்னை வழிகாட்டியதும், எனக்கு தனது அறிவுரையைப் பகிர்ந்ததுமான பதவி விலகிய பதில் பணிப்பாளர நாயகம் திரு.உபுல் புஷ்பகுமாரவை என்னால் மறக்க முடியாது.

இறுதியாக, மிகவும் மேலான அந்தரங்கத்துடன் எனக்காக நின்று, ஆதரவளித்தவர்கள் எனது அந்தரங்கச் செயலாளர் Ms. ஆயிஷா டயஸ் மற்றும் எனது சாரதி திரு. துஷாந்த புஷ்பராஜ் ஆகியோர் என்பதுடன், கை.தொ.நி.இன் தலைவராக எனது வெற்றியின் ஓர் அங்கமாக அவர்கள் யாவரையும் நான் பெரிதும் கருதுகின்றேன்.

அமல் டயஸ்
தலைவர்

2.2 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CISIR) அடுத்தமைகின்ற கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (கை.தொ.நி.), விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியன மூலம் பல சவால்களை 64 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்த்து, நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம், உசாவுகை, தொழில்நுட்பக் கைமாற்றம், பயிற்சி மற்றும் சர்வதேச அளவில் போட்டிச் சோதனை மற்றும் அளவுத்திருத்த சேவைகள் ஆகியன மூலம் கைத்தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துகிறது. நொவம்பர் 2019 வரை, இந்த நிறுவனம் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினதும் மற்றும் அதன் பின்னர் உயர் கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சினதும் கீழ் செயல்பட்டது.

கை.தொ.நி.இன் நடவடிக்கைகள், செயல்திறன் சிறப்பம்சங்கள் மற்றும் திட்டமிடப்பட்ட நோக்கங்களுக்கு எதிரான முனைவுகள் மற்றும் விளைவுகள் மற்றும் 2019ஆம் ஆண்டில் பாரியளவில் அரசாங்கம், கைத்தொழில்கள், அரசு-சாரா நிறுவனங்கள் மற்றும் சனசமூகம் ஆகியவற்றுக்கு தரமான சேவைகளை வழங்குவதில் எங்கள் பங்களிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றின் சுருக்கம் என 2019க்கான செயல் திட்டத்தை இந்த ஆண்டு அறிக்கை வழங்குகிறது.

முதலாவதாக, கை.தொ.நி. முகாமைத்துவச் சபையிடமிருந்து பெறப்பட்ட விலைமதிப்பற்ற வழிகாட்டுதலையும் மற்றும் ஆலோசனையையும் நான் பாராட்டுகிறேன். இரண்டாவதாக, ஆழ்ந்த கடமையுணர்ச்சி, அர்ப்பணிப்பு, கூட்டு மனப்பான்மை மற்றும் பணி ஆகியவற்றுக்கு பலதரப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்து, அன்றாடச் செயல்பாடுகளையும் மற்றும் சிறப்புப் பணிகளையும் கையாண்ட கை.தொ.நி. பணியாளர்களுக்கும் மற்றும் சக பணியாளர்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்தத் தொகுதிகளின் தளராத ஆதரவும் மற்றும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால், 2019இல் நிலவிய பெரும் பொருளாதாரச் சூழ்நிலைகளால் ஏற்பட்ட கொந்தளிப்பான காலங்களில் கை.தொ.நி. தனது இலக்குகளை அடைந்திருக்க முடியாது. கடினமான சூழ்நிலையில், எம்மால் சிறந்ததம் மற்றும் தாக்கம் நிறைந்ததுமான தேசத்திற்கு விஞ்ஞானத்தையும் மற்றும் தொழில்நுட்பத்தையும் மற்றும் புத்தாக்கத்தையும் வழங்க முடிந்தது.

2019இல், ஆராய்ச்சியின் மாற்றத்தையும், ஆராய்ச்சி முடிவுகளை வணிகமயமாக்குவதையும் எளிதாக்குகிய அதே வேளை, அரசாங்க முன்னுரிமைகளுடனும் மற்றும் தொழில்துறை தேவைகளுடனும் இணைந்த துறைகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புதுமாற்றம் ஆகியன மீது நாங்கள் தொடர்ந்தும் கவனம் செலுத்தினோம்.

ஆண்டின் போது, சோதனை, தொழில்நுட்பக் கைமாற்றங்கள், உசாவுகை, ஒப்பந்தக் கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி ஆகியன உட்பட 18,000க்கும் மேற்பட்ட சேவைகளை கை.தொ.நி. மேற்கொண்டதுடன், இலங்கையின் கைத்தொழில்கள், சர்வதேசக் கூட்டாண்மைகள் மற்றும் 1,000க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) உட்பட 10,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் பணியாற்றியது. தெற்கில் நிலையான வளர்ச்சிக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணையம் (COMSATS), ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் முன்னேற்ற அமைப்பு (UNIDO), உலக கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு (WAITRO), மூங்கில் மற்றும் பிரம்புக்கான சர்வதேச வலைப்பின்னல் (INBAR), யுனான் கிராமிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சேவை நிலையம் மற்றும் சீனாவில் உள்ள குன்மிங்கில் உள்ள யுனான் விவசாயப் பல்கலைக்கழகம், கொரிய அறிவுசார் சொத்து அலுவலகம் (KIPO), கொரிய பொது நிருவாக நிறுவனம் (KIPA), கனடா சர்வதேச வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் (IDRC) மற்றும் ஐக்கிய நாடுகளின் முன்னேற்றத் திட்டம் (UNDP) ஆகியவற்றுடனான ஊடாடல் எங்களின் மிக முக்கியமான சில ஒத்துழைப்புகளில் அடங்கும்.

தொழில்நுட்பக் கைமாற்றங்கள்

ஒப்பந்தங்கள் மூலம் இரண்டு முக்கிய தொழில்நுட்பக் கைமாற்றங்கள் முடிக்கப்பட்டன. (அ) கார்கில்ஸ் குவாலிட்டி கன்.ஃபெக்ஷனரிஸ் (பிரைவேட்) லிமிடெட்க்கு பிரத்யேக உரிமையுடன் வெண்டைக்காய், சோளம், உலர்ந்த பழங்கள் மற்றும் எள்ளு போன்ற உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சத்தான ஸ்கோன், குறைந்த அளவு சுக்ரோஸ், பரிமாறத் தயாராக இருக்கும் தட்டைப்பாண் மற்றும் (ஆ) கீல்ஸ் ஃபூட் புரடக்ட்ஸ் PLCக்கு 5 நிமிடங்களில் முழுமையாக சமைக்கும் வகையில் உள்நாட்டில் விளையும் அரிசி தானியங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புத்தாக்கத் தயாரிப்பான திடீர் அரிசி. கீல்ஸ் மூலம் நான்கு சுவைகளுடனான உடனடி அரிசி அறிமுகப்படுத்தப்பட்டதுடன், தற்போது நுகர்வோர் சந்தையில் கிடைக்கின்றது. மேலதிகமாக, கித்துலைத் தீவிரப்படுத்துவதற்கும் மற்றும் சாறு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் வினைப்பொருளின் உற்பத்திக்கான KASPER தொழில்நுட்பத்தைத் தொடர APIC அக்ரோ பிரைவேட் லிமிடெட் மற்றும் கைத்தொழில்

அபிவிருத்திச் சபை (IDB) ஆகியவற்றுடன் KASPER தயாரிப்புகளை IDB வலையமைப்பு மூலம் சந்தைப்படுத்த IDBஇன் சேவையை ஈடுபடுத்த உரிம ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

மதுசாரம் கொண்ட கித்துல் பானம், இனிப்புக் கள்ளு மற்றும் மாற்றியமைக்கப்பட்ட தென்னை நார் மரச்சோறு அடிப்படைப் பொருள் மற்றும் அதன் பயன்பாட்டுத் தயாரிப்புகள் ஆகியவற்றின் தொழில்நுட்பங்களுக்காக முறையே அக்ரி தேஷியா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் டப்ரோபேன் இன்டர்நேஷனல் ஆகியவற்றுடன் இரண்டு வெளிப்படுத்தாத ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

விசேடமாக, விதாத நிலையங்கள் மற்றும் விதாத தொழில்முனைவோர் மூலம் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டில் நுண் நிறுவனங்கள் (MEs) மற்றும் SME ஈடுபாடுகளை கட்டியெழுப்புவதற்கான/ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்பங்களை கை.தொ.நி தொடர்ந்து வழங்கி வந்தது.

ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம்

சிறந்த ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியன் மூலம் தேசத்திற்கு சேவை செய்வதைப் பாக்கியமாக கருதுகிறோம். அரசாங்கத்திற்குச் சொந்தமான முன்னணி தேசிய மற்றும் மிகப்பெரிய விஞ்ஞானரீதியிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பாக, கை.தொ.நி. ஆனது, இலங்கை மற்றும் உலகம் என இரண்டிலும் அரசாங்கம், ஆராய்ச்சி வலையமைப்பு, கைத்தொழில் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றும் முழு தேசத்திற்கும் தொழில்நுட்பப் புத்தாக்கத்தை வழங்குவதற்கான எங்கள் உள்ளமைய நோக்கத்தை வழங்குவதைத் தொடர்கிறது.

2019இல், அறுபத்து மூன்று தற்போதைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொழில் மற்றும் நுகர்வோர் தேவையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டங்கள் உணவு, சுகாதாரம், உயிரக-தொழில்நுட்பம், பொருள், சூழல், இயற்கை வளங்கள், அளவியல், மின் தொழில்நுட்பம் மற்றும் எதிர்காலக் கைத்தொழில்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கியிருந்தன. தொழில்நுட்பச் சிக்கல்களை கை.தொ.நி. வெற்றிகரமாக தீர்த்ததுடன், கைத்தொழிலுக்கும் மற்றும் சமூகத்திற்கும் தீர்வுகளையும் வழங்கியது.

நுண்ணலை நீர்-பரவுகை மற்றும் புவியீர்ப்பு ஆகிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குதிரைவாலி அடிப்படையிலான பொருட்கள், கித்துல் சார்ந்த பொருட்கள், தானியங்கள் சார்ந்த பொருட்கள் மற்றும் மருத்துவத் தாவர அடிப்படையிலான மூலிகை மருந்துகள், இயற்கை வாசனைத்திரவியங்கள், சாறுகள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்கள் போன்ற உணவுப் பொருட்கள் ஒப்பனை மற்றும் உணவுத் துறையில், உயிரக-பூச்சிக்கொல்லிகள், சுத்திகரிக்கப்பட்ட காரியம், கிராபெனின், குறைக்கப்பட்ட கிராபென் ஒட்சைட் மற்றும் காரீயம் கலவைகள் மற்றும் நீர் ஆகியவற்றின் கடினத்தன்மையையும் மற்றும் பிற அசுத்தங்களையும அகற்ற கனிமங்களுடன் மாற்றியமைக்கப்பட்ட களிமண் ஆகியன உட்பட வணிகமயமாக்கலுக்கான பல தொழில்நுட்பங்கள் இந்த கருத்திட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்டன.

'ரட்ட வெனுவென் எகட்ட ஹிட்டிமு' கருத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மொனராகலை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களில் தொழில்நுட்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைக் கை.தொ.நி. நடத்தியது.

தொழில்நுட்பச் சேவைகள்

சோதனைச் சேவைகளில் கை.தொ.நி.இன் அனுபவங்களையும் மற்றும் வெற்றிகளையும் தொடர்ந்து, 2019இல், நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, கை.தொ.நி.இன் ஆழ்ந்த கள நிபுணத்துவத்தின் எல்லையில், அதன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பச் சேவைகளை, உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கும் மற்றும் அரசு நிறுவனங்களுக்கும் தொடர்ந்து வழங்குகிறோம். இரசாயனம், நீர், உணவு, அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள், பூச்சிக்கொல்லி எச்சங்கள், கன உலோகங்கள் மற்றும் மைக்கோடாக்சின்கள் மற்றும் மூலிகை மருந்துகள், பொருட்கள், உராய்வு நீக்கி மற்றும்

பெற்றோலிய எண்ணெய், பொதிப்படுத்தல், நுண்ணுயிரியல் மற்றும் தேசிய அளவியல் உள்கட்டமைப்பு போன்றவற்றின் சுவடு நிலை சூழல் அசுத்தங்கள் ஆகிய துறைகளில் இந்தச் சேவைகள் வழங்கப்பட்டன. பெருமளவு தேசிய நிறுவனங்களுக்கும் மற்றும் கருத்திட்டங்களுக்கும் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதன் மூலம், கை.தொ.நி. அதன் புத்தாக்கத் தொழில்நுட்பத்தைப் பரப்புவதில் தீவிரமாகப் பங்கேற்றது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், உணவுப் பதப்படுத்தலில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களை தற்போதைய தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துவதற்கு கை.தொ.நி. உதவியதுடன், வட மாகாணத்தில் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சரிசெய்தலையும் மேற்கொண்டது. சீனி, உப்பு மற்றும் கொழுப்பு ஆகிய உள்ளடக்கத்திற்கான வண்ணக் குறியீடுகளுடன் உணவுப் பொருட்களை சுட்டித்துண்டிடுதலுக்கான அரசாங்கத்தின் புதிய ஒழுங்குவிதியின்படி, வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின்படி 500க்கும் மேற்பட்ட மாதிரிகளை கை.தொ.நி. சோதனை செய்தது.

2019இன் போது, கை.தொ.நி. நடமாடும் ஆய்வகம், காற்று மாசுக் கட்டுப்பாடு மற்றும் தணிப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக்கழிவு முகாமைத்துவம், நீர் தர ஆய்வுகள், அபாயகரமான கழிவு முகாமைத்துவம், சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் அடுக்கு உமிழ்வு கண்காணிப்பு உட்பட சூழல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் என பல்வேறு துறைகளில் 200க்கும் மேற்பட்ட சேவைகளைக் கை.தொ.நி. நடத்தியது. நாட்டில் மின்சாரம் மற்றும் சக்தி, வீதி, நெடுஞ்சாலைகள், ரயில், கைத்தொழில் மற்றும் கப்பல் துறைகள் ஆகியவற்றுக்கு அளவீடுகள், தணிப்பு, எதிர்வுகூறல் மற்றும் ஒலி மாதிரிப்படுத்தல் சேவைகள் உள்ளிட்ட இரைச்சல் மற்றும் அதிர்வு மதிப்பீட்டு ஆய்வுகள் வழங்கப்பட்டன.

தர உட்கட்டமைப்பு

ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றப் பிரிவு மற்றும் தகவல் சேவை நிலையம் ஆகியவற்றுக்கான ISO 9001:2015 தர முகாமைத்துவ முறைமைச் சான்றிதழுடன் நிறுவனம் தொடர்ந்தது.

கை.தொ.நி.இன் தற்போதைய ஆய்வக தர முகாமைத்துவ முறைமை ISO/IEC 17025:2005 தொழில்நுட்பச் சேவைகள் பிரிவுக்கான ISO/IEC17025:2017 ஆய்வக தர முகாமைத்துவ முறைமையாக மாற்றப்பட்டதுடன், இரசாயனம், உணவு மற்றும் நீர், கழிவு நீர், அழகுசாதனப் பொருட்கள், பொருட்கள் (சிமெந்து, இறப்பர் மற்றும் மட்பாண்டங்கள்), நுண்ணுயிரியல் அளவுருக்கள், இரசாயன எச்சங்கள், உலோக எச்சங்கள் மற்றும் கைத்தொழில் இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகள் ஆகியவற்றுக்காக 500க்கும் மேற்பட்ட சோதனை அளவுருக்கள் இலங்கை அங்கீகார சபையினால் (SLAB) அங்கீகாரம் பெற்றன. தென் கொரியா கொரிய தரநிலைகள் மற்றும் விஞ்ஞான் ஆராய்ச்சி நிறுவனம் (KRISS) மற்றும் ஜேர்மனி Physikalisch-Technische Bundesanstalt (PTB), தாய்லாந்து தேசிய அளவியல் நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக, SI அலகுகளுக்கு திரள், பரிமாணங்கள், கனவளவு, மின், விசை, அழுத்தம் மற்றும் வெப்பநிலை அளவீடுகள் மற்றும் அளவீட்டுத் தடமறிதலுக்கான ஆய்வக தர முகாமைத்துவ முறைமை ஆகியவற்றுக்கு ISO/IEC17025:2017 ஆய்வக தர முகாமைத்துவ முறைமையைக் கைத்தொழில் அளவியல் ஆய்வகம் தொடர்ந்தது

2019இல் SLABஆல் ISO/IEC 17043: 2010 தகுதித் தேர்விற்கான (PT) அங்கீகாரத்தை கை.தொ.நி. பெற்றதுடன், இதுவே இந்த நிலையைத் தக்கவைக்கும் முதல் மற்றும் ஒரே இலங்கை ஆய்வகமாகும். நீர் நுண்ணுயிரியல், உணவு நுண்ணுயிரியல் மற்றும் சிமெந்துக்கான இரசாயன மற்றும் பௌதீக சோதனை ஆகியவற்றில் PT திட்டங்களை நடத்தும் திறனை கை.தொ.நி. கொண்டது.

உட்கட்டமைப்பு முன்னேற்றம்

UNIDO நிதிப்படுத்தலிலான பொதிப்படுத்தல் சோதனை ஆய்வகம், அரசாங்கத்தின் நிதியுதவி பெற்ற பெற்றோலியம் மற்றும் மசகு எண்ணெய் சோதனை ஆய்வகம் மற்றும் தேசிய மருந்து ஆய்வகம் மற்றும் சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கூடிய சீன-இலங்கை கூட்டு உயிரக-தொழில்நுட்ப ஆய்வகம் ஆகியவற்றின் பெரும் திட்டங்களின் முன்னேற்றம் முந்தைய

ஆண்டுகளில் பல்வேறு கொள்கை முரண்பாடுகள் காரணமாக மெதுவாக இருந்தது. எனினும், நான் தலைமைத்துவத்தை வழங்கியதுடன், சொல்லப்பட்ட காலத்தின் போது கூட்டுமுயற்சிகளைத் தாபிப்பதற்கு இந்த நிறுவனங்களுக்கு வழிகாட்டினேன்.

சீனாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (MOST) மற்றும் இலங்கையின் உயர் கல்வி ஆராய்ச்சி அமைச்சு ஆகியவற்றுடன் கைச்த்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், யுன்னான் கிராமிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் சேவை நிலையம் மற்றும் சீனாவின் குன்மிங்கில் உள்ள யுன்னான் விவசாயப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கை.தொ.நி. கைச்சாத்திட்டது. 2019இல் இந்த கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ் விசேட தாவர வளங்கள் (தேயிலை, கறுவா மற்றும் முருங்கை) மற்றும் அவற்றின் தொழில்துறை பயன்பாடுகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக உயரக-தொழில்நுட்பத்திற்கான சீன-இலங்கை கூட்டு ஆய்வகத்திற்கு USD 600,000ஐ கொண்ட உபகரண மானிய மதிப்பினை கை.தொ.நி. பெற்றது. உயிரக-தொழில்நுட்ப ஆய்வகத்தை முடிப்பதற்காக, மாலபேயில் உள்ள நவீன ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத் தொகுதியில் (MRDC) உள்ள சீன-இலங்கை கூட்டு உயிரக-தொழில்நுட்ப ஆய்வகத்தை முடிக்க உள்நாட்டுக் கட்டுமான நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கை.தொ.நி. கைச்சாத்திட்டது.

உயிரக-தொழில்நுட்பப் பிரிவில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் ஊடாக FAOஇன் உதவியுடன் வாழும் நுண்ணுயிரிகளுக்கான மேற்கோள் மற்றும் சோதனை ஆய்வகத்தை நிறுவ கை.தொ.நி. ஆரம்பித்தது. ஆண்டின் போது, மாலபே MRDCஇல் உள்ள உணவுத் தொழில்நுட்பப் பிரிவில் US FDA ஒழுங்குவிதிகளின்படி பதிவு செய்யப்பட்ட உணவு மற்றும் குறைந்த ஈரப்பதன் பதப்படுத்தப்பட்ட உணவு ஆகியவற்றின் செயல்பாடுகளின் வெப்ப செயல்முறைச் சரிபார்ப்புக்கான வசதியையும் கை.தொ.நி. நிறுவியது.

ஆய்வரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள்

மாலபேயில் புதிதாக நிறுவப்பட்ட MRDCஇல் 2019 டிசம்பர் 17 முதல் 18 வரை "நிலையான வளர்ச்சிக்கான விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் மற்றும் புத்தாக்கத்திலும் சிறந்து விளங்குதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் 4ஆவது கை.தொ.நி. இரு வருட ஆராய்ச்சி ஆய்வரங்கம் நடைபெற்றது. கௌரவ உயர் கல்வி, தொழிநுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாகவும், தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக COMSATSஇன் நிருவாகப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம். ஜுனைத் ஜைதி கலந்து கொண்டார். இந்த ஆய்வரங்கத்தில், கை.தொ.நி.இல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் பெறப்பட்ட அறிவைப் பரப்புகின்றதும் மற்றும் பகிர்ந்து கொள்கின்றதுமான வகையில் 40 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. விருது வழங்கும் விழாவில் கை.தொ.நி. விஞ்ஞானிகளினதும் மற்றும் பொறியியலாளர்களினதும் சிறந்த செயல்திறன் பாராட்டப்பட்டது மற்றும் வாழ்த்தப்பட்டது. அத்துடன் விருதுகளையும் மற்றும் சான்றிதழ்களையும் கிட்டத்தட்ட 30 ஆராய்ச்சியாளர்கள் பெற்றனர்.

விருதுகள், ஆக்கவுரிமைகள், வெளியீடுகள் மற்றும் அங்கீகாரங்கள்

இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில கை.தொ.நி. விஞ்ஞானிகள் இரு தங்கப் பதக்கங்களை வென்றனர். இலங்கை கமத்தொழில் கொள்கைகளுக்கான மன்றம் ஒழுங்குசெய்திருந்த விவசாய ஆராய்ச்சியில் சிறந்து விளங்கியதற்காக SLCARD விருதுகளுக்கு இரண்டு முதல் இடங்களும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் கிடைத்தன. இலங்கையின் தேசிய விஞ்ஞான மனறத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட SUSRED (ஆராய்ச்சி பட்டங்களின் மேற்பார்வைக்கான ஆதரவுத் திட்டம்) விருதை கை.தொ.நி.இல் உள்ள ஒரு விஞ்ஞானி வென்றார்.

2019இன் போது, நடுவர் இதழ்களில் 31 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டதுடன், சர்வதேச வெளியீட்டாளர்களுக்காக இரு நூல் அத்தியாயங்கள் எழுதப்பட்டன. மேலதிகமாக, ஆண்டின் போது, 10 உள்நாட்டு ஆக்கவுரிமைகளுக்கான விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்ட வேளை, ஒரு ஆக்கவுரிமை பெறப்பட்டது.

மனித வள மேம்பாடு

2019இல், ஆராய்ச்சி விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், ஆராய்ச்சித் தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் அந்தரங்கச் செயலாளர், சிரேஷ்ட சட்ட அலுவலர், சிரேஷ்ட களஞ்சிய அலுவலர், சந்தைப்படுத்தல் அலுவலர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் உட்பட அறுபத்தாறு பணியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். இரண்டு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மற்றும் மூன்று ஆராய்ச்சி தொழில்நுட்ப வல்லுநர்கள் ராஜினாமா செய்தனர், அதே வேளை, 4 ஆராய்ச்சி தொழில்நுட்பவியலாளர்கள ஓய்வு பெற்றனர். பெற்றோலியம் மற்றும் உராய்வுநீக்கிச் சோதனை ஆய்வகத்திற்கும் மற்றும் தேசிய மருந்து ஆய்வகத்திற்குமான மேலதிக ஊழியர்கோப்புக்கான ஒப்புதலுடன் நிறுவனப் பணியாளர்களின் எண்ணிக்கை 440ஆக உயர்த்தப்பட்டது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், ஒரு விஞ்ஞானி தனது முனைவர் பட்டத்தைப் பெற்ற அதே வேளை, இரு விஞ்ஞானிகள் பகுப்பாய்வு இரசாயனவியலில் முதுகலையை முடித்தனர்.

நிதிநிலைச் செயல்பாடு

2019இல் ரூ.121 மில்லியன் மூலதன மானியமும் மற்றும் ரூ. 225 மில்லியன் ஒதுக்கீடும் பெறப்பட்டன. இந்த நிதியானது புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சோதனைச் சேவைகள் ஆகியன மூலம் அதிக வருமானத்தை ஈட்டுவதற்காக ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்பச் சேவைகள் ஆகியவற்றுக்கான உயர்தர உபகரணங்களைக் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில், ரூ. 225 மில்லியனில் ரூ.207 மில்லியனைப் பயன்படுத்தி கொள்வனவு செயல்முறையை முடித்ததன் மூலம், தனது நிதி முன்னேற்றத்தை 92%ஆக பதிவு செய்ய கை.தொ.நி.ஆல் முடிந்தது. 2019இல் பணியாளர்களின் ஊதியத்தையும் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான செலவுகளையும் ஈடுசெய்வதற்கான மீளவரும் மானியமாக ரூ.250 மில்லியனைக் கை.தொ.நி. பெற்றது.

நிறுவனத்தின் வருமானம் 2018இல் ரூ 324 மில்லியனில் இருந்து 2019இல் ரூ 335 மில்லியனாக அதிகரித்துள்ளது. அதே காலக்கட்டத்தில் மீண்டும் மீண்டும் செலவு ரூ. 552 மில்லியனில் இருந்து ரூ 589 மில்லியனாக அதிகரித்துள்ளது. வருமானம்/தொடர் செலவின விகிதம் 52.4%இலிருந்து 51.7%ஆக சிறிது குறைந்துள்ளது. நிறுவனம் தனது வருமானத்தில் அதிக சதவீதத்தை சோதனை மற்றும் மதிப்பாராய்தல் சேவைகள் மூலம் உருவாக்கியதுடன், இது உருவாக்கப்பட்ட வருமானத்தில் 63%க்கு (ரூ. 192 மில்லியன்) பங்களித்த அதே வேளை தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் ஒப்பந்த திட்டங்கள் ஆகியன உட்பட தொழில்நுட்பக் கைமாற்றம் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியன மூலம் வருமானம் அண்ணளவாக 37%ஆக தொடர்ந்தும் இருந்தது. ஒப்பந்தங்கள் மற்றும் உசாவுகைச் சேவைகள் ஆகியவற்றின் வருமானம் 2018இல் ரூ. 52 மில்லியனில் இருந்து 2019இல் ரூ. 85 மில்லியனாக அதிகரித்துள்ளது. தொழில்நுட்பக் கைமாற்றத்தின் வருமானம் 2018உடன் ஒப்பிடும் போது 2019இல் இரட்டிப்பாகி ரூ. 7.51 மில்லியனாக இருந்தது. ஆண்டுக்கு நிறுவனம் நிர்ணயித்த ஒட்டுமொத்த வருமான இலக்கை அடைந்ததால், செயல்திறன்-அடிப்படையிலான ஊக்கத்தொகைகள் தொடர்ந்தும் 16ஆவது ஆண்டாகப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு நாம் பரிணமித்து, தொடர்ந்து மாற்றியமைக்கும் போது, அடுத்த நூற்றாண்டுக்கும் கை.தொ.நி. நிலைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதார மீட்சியை வடிவமைப்பதிலும் மற்றும் வழிகாட்டுவதிலும் கை.தொ.நி.க்கு அதிக ஈடுபாடுள்ள வகிபங்கை நான் எதிர்பார்க்கிறேன். இந்த வருடாந்த அறிக்கையானது இலங்கையிலுள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் சிறந்த எதிர்காலத்திற்கான இலக்கு சேவைகளை வழங்குவதற்கும், அதன் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அத்துடன்

மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கு பதிலளிப்பதற்கும் கை.தொ.நி.ஆல் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளைக் காட்சிப்படுத்தியுள்ளது.

ஏற்றுக்கொள்ளல்கள்

தலைவர் மற்றும் முகாமைத்துவச் சபை, முகாமைத்துவக் குழு, பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், நேரடி அமைச்சு மற்றும் நன்கொடை வழங்கும் முகவர்கள்.

கலாநிதி ஜே.கே.ஆர்.ஆர். சமரசேகர
பணிப்பாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று அதிகாரி, கை.தொ.நி.

2.3 செயல் திட்டம்

நோக்கம்: இலங்கை மக்களின் நன்மைக்காக துரிதப்படுத்தப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திக்காக புத்தாக்கத்திலான ஆராய்ச்சியையும் மற்றும் அபிவிருத்தியையும் நடத்துதல் அத்துடன் சர்வதேசரீதியில் போட்டிக்குரிய தொழில்நுட்பச் சேவைகளை வழங்குதல்					
இல.	நடவடிக்கைகள்/ விளைவு	முக்கிய செயற்றிறன் காட்டி	இலக்கு	உண்மையான	கருத்துக்கள்
பூர்வாங்க விளைவு					
1	கைத்தொழில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்	தாபிக்கப்பட்ட/தரமுயர்த்தப்பட்ட புதிய கைத்தொழில்களின் எண்.	11	13	சாதிக்கப்பட்டது
2	தொழில்நுட்பத்தின் வர்த்தகமயப் படுத்தலை அதிகரித்தல்	வர்த்தகமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்.	11	12	சாதிக்கப்பட்டது
		ஆக்கவுரிமைப் பங்கிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (மில்லியன்)	2	1.1	சாதிக்கப்படவில்லை
3	வாடிக்கையாளர் திருப்தியை அதிகரித்தல்	நேரகாலத்திற்கான விநியோகம், தரம், ஆகுசெலவு, முறைப்பாடுகள் போன்றன %	100	96	சாதிக்கப்படவில்லை
4	நிதிசார் செயற்றிறனை மேம்படுத்தல்	வருமானம் ரூ. (மில்லியன்)	316	335	சாதிக்கப்பட்டது
		வருமான அறவிடல் விகிதம் %	56	57	சாதிக்கப்பட்டது
		வருமான வளர்ச்சி வீதம் %	15	5.2	சாதிக்கப்படவில்லை
விளைவுகள்					
1	கைத்தொழிலுக்கான தொழில்நுட்பவியல் தீர்வுக்கான அதிகரித்த அடைதல்	முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்.	12	7	சாதிக்கப்படவில்லை
		தொழில்நுட்பக் கைமாற்றம் ஊடாக தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	5	7.5	சாதிக்கப்பட்டது
		கைமாற்றப்பட்ட கருத்திட்ட தொழில்நுட்பங்களின் எண்.	42	45	சாதிக்கப்பட்டது
2	தொழில்துறைக்கான தொழில்நுட்ப தீர்வுக்கான அதிகரித்த அடைதல்	கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட புதிய சோதனைச் சேவைகளின் எண்.	24	35	சாதிக்கப்பட்டது
		முழுமையாகப் பயிற்றுவிக்கப்பட்ட நபர்களின் எண்.	200	220	சாதிக்கப்பட்டது
		அளவீடுகளை நடத்துவதற்கும், சூழல் தீழ்ப்பினைக் கண்காணிப்பதற்குமான உசாவுகைகளின் எண்.	46	216	சாதிக்கப்பட்டது
		நடத்தப்பட்ட தொழில்நுட்பவியல் சோதித்தலினதும்/மதிப்பாராய்தல் சேவைகளினதும் எண்.	18,000	17,978	சாதிக்கப்படவில்லை
		தொழில்நுட்பவியல் சேவைகளின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (சகல மூலங்கள் ஊடாக தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானத்தின் % ஆக)	90	100	சாதிக்கப்பட்டது
		அ. உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான சேவைகள் %	95	100	சாதிக்கப்பட்டது
		ஆ. வெளிநாட்டுக் கைத்தொழில்களுக்கான சேவைகள் %	5	0	சாதிக்கப்படவில்லை
		முடிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சிகளின்/உசாவுகைகளின்/தொழில்நுட்பச் சேவைகளின் எண்.	20	5	சாதிக்கப்படவில்லை
		ISO 17025 தத்துவமளிக்கப்பட்ட சோதித்தலினதும்/அளவீட்டு	500	508	சாதிக்கப்பட்டது

		ஆய்வகங்களினதும், பகுதிகளினதும் எண்.*			
		ISO 9001:2008 QMS சான்றுபடுத்தப்பட்ட ஆராய்ச்சி ஆய்வகங்களினதும்/ஆதரவுப் பிரிவுகளினதும் எண்.*	5	5	சாதிக்கப்பட்டது
		QAD - விருத்திசெய்யப்பட்ட/ பரப்பப்பட்ட CRMகளின்/RM களின் எண்.	10	5	சாதிக்கப்படவில்லை
3	தொழில்நுட்பம் மீது புதிய அறிவுக்கான அதிகரித்த அடைதல்	நூற்கல்வி தகைமைக்காக (PhD/MPhil) வசதிப்படுத்தப்பட்ட அலுவலர்களின் எண்.	6	7	சாதிக்கப்பட்டது
		வாழ்க்கைத்தொழில் தகைமைக்காக வசதிப்படுத்தப்பட்ட அலுவலர்களின் எண்.	6	3	சாதிக்கப்படவில்லை
		மத்தியஸ்த சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் எண்.	25	39	சாதிக்கப்பட்டது
		விஞ்ஞானரீதியிலான தொடர்பாடல்களின் எண்.	80	113	சாதிக்கப்பட்டது
[1] தொழில்நுட்பச் சேவைகள் = சோதித்தல் /மதிப்பாராய்தல், பயிற்சி மற்றும் உசாவுகைச் சேவைகள்					
* தொடருகின்ற தத்துவமளிப்பினை உள்ளடக்குகிறது					
T = இலக்கு A = உண்மையான					

அத்தியாயம் 03: ஆளுகை மற்றும் ஊதியம்

3.1 சபையின் விடயங்கள்

நிறுவனத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் அலுவல்களின் கட்டுப்பாடு ஆகியவற்றுடன் கை.தொ.நி.இன் முகாமைத்துவச் சபை உரித்தாக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறாக நிறுவனத்திற்கான செயற்பணி, மூலோபாயம், குறிக்கோள்கள், செயற்பாட்டிலான கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றை அங்கீகரிப்பதுடன், நோக்கங்களுக்கு எதிராக கொள்கைகளுடனும் மற்றும் சாதனையுடனும் இணக்கத்தையும் கண்காணிக்கின்றது.

3.2 முகாமைத்துவச் சபை

மூன்று வருடங்களைக் கொண்ட காலமொன்றுக்கு சபை உறுப்பினர்களை விஞ்ஞானத்திற்கும், தொழில்நுட்பத்திற்கும் பொறுப்பான அமைச்சர் நியமிக்கின்றார். ஒரு தலைவர், கை.தொ.நி.இன் பணிப்பாளர், நிதியின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர், தொழில்நுட்பக் கைமாற்றத்திற்கும் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கும் நிதிப்படுத்தும் இரவல் வழங்கும் நிறுவனமொன்றின் பிரதம நிறைவேற்றுனர் மற்றும் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் கைத்தொழில் தொழில்முயற்சியாளர்கள் மத்தியிலிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் ஐந்துக்கு மேற்படாத வேறு உறுப்பினர்கள் ஆகியோரைச் சபை கொண்டுள்ளது. பணிப்பாளரைத் தவிர கை.தொ.நி. சபையின் சகல உறுப்பினர்களும் நிறைவேற்றுனர் சாராதோர். தற்போது பின்வருமாறு 08 உறுப்பினர்களைக் கொண்டுள்ள கை.தொ.நி. சபையானது மாதாந்தம் கூடுகின்றது.

2019 டிசம்பர் 8இல் உள்ளவாறு

தலைவர்

திரு. அமல் ஆர். டயஸ்

உறுப்பினர்கள்

கலாநிதி ராதிகா சமரசேகர பணிப்பாளர் நாயகம்	திருமதி டி. நந்தனி சமரவிக்ரம
திரு. கே.ஜி.பிரதீப் புஷ்பகுமார	திரு. இந்திக டீ சொய்சா
பேராசிரியர் ரமணி விஜேசேகர	திரு. எம்.ஏ.ஜே.எல். ரத்னவர்தன
திரு.சுரேஷ் பொன்னாண்டோ	கலாநிதி நிஷாந்த நாணயக்கார

3.3 முகாமைத்துவக் குழு

தாபனத்தை முகாமைத்துவக் குழுவின் உதவியுடன் பணிப்பாளர் நாயகம் நிருவகிக்கின்றார். 3 மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள், 12 தொழில்நுட்பச் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள், 3 நிருவாகச் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் நிருவாகச் செயலாளர் ஆகியோரை முகாமைத்துவக் குழாம் கொண்டுள்ளது. தொழில்நுட்பச் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள் 3 வருட ஒப்பந்தங்களின் மீது நியமிக்கப்படுவதுடன், தவணை முடிந்தவுடன் குழாம் நேர்முகங்காணலுடன் புதிய/மீள்நியமனங்கள் செய்யப்படும்.

தாபனத்தின் மூலோபாயத்தினை நிறைவேற்றுவதற்கும் அத்துடன் முகாமைத்துவச் சபைக்கு அறிக்கையிடுவதற்கும் பொறுப்பான பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மாதாந்தக் குழுக் கூட்டங்களைக் குழு நடத்துகின்றது.

2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு

பணிப்பாளர் நாயகம்
கலாநிதி ஜே.கே.ஆர்.ஆர்.சமரசேகர

மேலதிகப் பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்
கலாநிதி இல்மி ஜி என் ஹெவஜுலிகே

மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பச் சேவைகள்
வெற்றிடம்

மேலதிகப் பணிப்பாளர் நாயகம், நிருவாகமும், செயற்படுத்தலும்
திரு.கே.எ.எஸ்.பி.களுஆரச்சி

ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

கலாநிதி இல்மி ஜி.என்.ஹேவாஜுலிகே
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
உணவுத் தொழில்நுட்பப் பிரிவு

கலாநிதி பி.ரணசிங்க
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
மூலிகைத் தொழில்நுட்பப் பிரிவு

கலாநிதி இரேஷா கோட்டேகொட
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
பொருட்கள் தொழில்நுட்பப் பிரிவு

எந்திர. என்ஃ.ரி.டி.குணசேகர
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
சூழல் தொழில்நுட்பப் பிரிவு

கலாநிதி ஆர்.எம்.தர்மதாச
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
உயிரியல்-தொழில்நுட்ப அலகு

தொழில்நுட்பச் சேவைகள்

கலாநிதி எச்.பி.பி.எஸ்.சோமசிறி
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
இரசாயன, நுண்ணுயிரியல் ஆய்வகம்

கலாநிதி டபிள்யு.எம்.எஸ்.விஜேசிங்க
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
கைத்தொழில் அளவையியல் ஆய்வகம்

கலாநிதி எந்திர. ஆர்.எம்.வீரசிங்க
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
மின் தொழில்நுட்ப ஆய்வகம்

பொறியியலாளர் எ.ரி.எம்.அதிகாரி
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
பொருட்கள் ஆய்வகம்

திரு.எம்.என்.எ.முபாரக்
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
எச்சப் பகுப்பாய்வு அலகு

நிருவாகமும், செயற்படுத்தலும்

Ms. ஹிராந்தி கத்திரிஆரச்சி
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
நிருவாகம், மனித வளங்கள்

திரு.லலின் குணரத்ன
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்
நிதிப் பிரிவு

பொறியியலாளர் எ.எஸ்.ஆரச்சி
பிரதம பொறியியலாளர்
பொறியியல் சேவைகள்

Ms. மனோரி விஜேமான்ன
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்,
சந்தைப்படுத்தல், வியாபார அபிவிருத்தி

தர உறுதிப்படுத்தல் திணைக்களம்

Ms. சஜிவிகா பெரேரா
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்

தகவல் சேவைகள் நிலையம்

Ms.பூர்ணிமா ஜயசிங்க
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்

உள்ளகக் கணக்காய்வு
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
(வெற்றிடம்)

3.4 உள்ளகக் கணக்காய்வுகள்

முகாமைத்துவத்தின் சகல மட்டங்களுக்கும் சேவையொன்றாக செயற்பாடுகளின் மதிப்பாய்வுக்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் சுதந்திரமான மதிப்பாய்வுப் பணியொன்றே உள்ளகக் கணக்காய்வாகும். தாபனத்தினுள் மூலவளங்களின் பயனுறுதிவாய்ந்த உபயோகத்திற்கு பங்களிப்பொன்றாக நிதிசார் மற்றும் நிதிசாராத உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன்கள் மீது அளவிடுகின்றதும், மதிப்பாய்வு செய்கின்றதும் அத்துடன் அறிக்கையிடுவதுமான கட்டுப்பாடொன்றாக இது விளங்குகின்றது. நிறுவனத்தின் நிறுவனம்சார் கட்டமைப்பின்படி, உள்ளக கணக்காய்வுத் தலைவரின் கீழ் செயல்படுவதுடன், அது நேரடியாக நிறுவனத்தின் தலைவருக்கு அறிக்கையிடுகிறது.

நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளுடன்/அங்கீகாரத்துடன் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுச் செயற்றிட்டத்தின் மீது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வருடாந்தப் பணி அடிப்படையைக் கொண்டுள்ளதுடன், இது நேரடி அமைச்சின் பிரதம கணக்கிடல் அலுவலரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். கணக்காய்வுச் செயற்றிட்டத்தின் வரிசைப்படுத்தப்பட்டுள்ள கணக்காய்வு குறித்தொதுக்குதல்களுக்கு மேலதிகமாக காலத்திற்குக் காலம் நிறுவனத்தின் தலைவரினால், முகாமைத்துவ சபையினால் அல்லது பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் சந்தேகிக்கப்பட்ட மோசடி அல்லது ஏதேனும் வேறு விசேட குறித்தொதுக்குதல்கள் குறித்து உள்ளகக் கணக்காய்வு விசேட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், ஆகுசெலவு-பயனுறுதித்தன்மைக்கும் மற்றும் வீணான செலவினத்தை நீக்குவதற்கும் கிரமமான இடைவெளிகளில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாயவும் அத்துடன் மதிப்பிடவும் மற்றும் செயற்றிறனை மதிப்பாயவும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வு அறிக்கைகளுக்கு/கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிப்பதற்கு வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் தொடர்புகொள்ளவும், நியதியாக்கங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் சுற்றுநிருபங்கள் ஆகியன இணங்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு முடிவுகள் மீதான அடிப்படையில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கவும், கணக்கீட்டு நியமனங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு நிதிசார் கூற்றுக்களை மதிப்பிடவும்,

கணக்காய்வுக் குழுவினதும் மற்றும் முகாமைத்துவச் சபையினதும் பரிந்துரைகளின்/ பணிப்புரைகளின் அமுலாக்கத்தை மதிப்பிடவும் வேண்டும்.

2019ஆம் ஆண்டில், கை.தொ.நி.இல் மூன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடத்தப்பட்டன. அறிக்கையிடப்பட்ட விடயங்கள் மீது செம்மையான நடவடிக்கைகளை/தீர்விலான நடவடிக்கையை எடுப்பதை வசதிப்படுத்துவதற்காக, கூட்டக் குறிப்புகளுடன் சேர்த்து முகாமைத்துவச் சபைக்கு பரிந்துரையைக் கணக்காய்வுக் குழு செய்தது. மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நேரடி அமைச்சில் நடைபெற்ற நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களில் உள்ளகக் கணக்காய்வுத் தலைவர் பங்கேற்றுள்ளார்.

3.5 ஊதியம்

சம்பளம்
முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை மீதான அடிப்படையில் தாபனத்தின் பணியாளர்களுக்கான சம்பளம் விளங்குகின்றது. பிரிவின் தலைவரின் மதிப்பாய்வொன்றின் பின்னர் வருடாந்த சம்பள ஏற்றமொன்று வழங்கப்படுகின்றது.

வேறு நன்மைகள்
அரசாங்கத் துறை வாழ்க்கைத்தொழில்புரிபவர்களுக்கு உரித்தான நிதிசார் நன்மைகள், வாழ்க்கைத்தொழில் படி, தொடர்பாடல் படி, ஆராய்ச்சியாளர்களுக்கான ஆராய்ச்சிப் படி மற்றும் உயர் முகாமைத்துவத்திற்கான போக்குவரத்துப் படி ஆகியவற்றை நிறைவேற்று அலுவலர்கள் அனுபவிக்கின்றனர். ரூ.6,000 கொண்ட மருத்துவப் படி, செயற்றிறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக்கள் மற்றும் நிதிசார் இலக்குகளை நிறைவேற்றுவது மீதான PF 380 ஆகியவற்றுக்கு முழுப் பணியாளரும் உரித்தினைக் கொண்டுள்ளார்கள். இந்தக் கொடுப்பனவுகள் கை.தொ.நி.இன் ஊழியர்களை செயல்நோக்கமளிக்கின்றன.

அத்தியாயம் 04: செயல்திறன் சிறப்பம்சங்கள்

4.1 தொழில்நுட்பக் கைமாற்றங்கள்

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, ஒப்பந்தங்கள் மூலம் இரண்டு முக்கிய தொழில்நுட்ப கைமாற்றங்கள் முடிக்கப்பட்டன. கார்கில்ஸ் குவாலிட்டி கன்.்பெக்ஷனரிஸ் (பிரைவேட்) லிமிடெட்டுக்கு பிரத்தியேக உரிமைகளுடன் (அ) போஷாக்கிலான ஸ்கோன், பரிமாறத் தயாராக உள்ள குறைந்த-சேர்க்கப்பட்ட சுக்ரோஸ் தட்டைப்பாண் மற்றும் (ஆ) கீல்ஸ் .்பூட் புரடக்ட்ஸ் PLCக்கு உள்நாட்டில் வளர்க்கப்படும் அரிசித் தானியங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு புத்தாக்கத் தயாரிப்பான உடனடி அரிசி என தொழில்நுட்பக் கைமாற்றங்களை அவை அடக்கியிருந்தன.

சத்தான ஸ்கோன், குறைந்த அளவு சேர்க்கப்பட்ட சுக்ரோஸ், பரிமாறத் தயாராகவுள்ள தட்டைப்பாண் ஆகியவற்றின் தொழில்நுட்பக் கைமாற்றம்

உள்நாட்டு உட்பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பரிமாறுவதற்கு தயாரான ஆரோக்கியமான சத்துள்ள உற்பத்தியை உருவாக்கும் குறிக்கோளுடன் உருவாக்கப்பட்ட தட்டைப்பாண் என்ற போஷாக்கிலான ஸ்கோனுக்கான தொழில்நுட்பம் கார்கில்ஸ் குவாலிட்டி கன்.்பெக்ஷனரிஸ் (பிரைவேட்) லிமிட்.க்கு மாற்றப்பட்டது. ஸ்கோனில் அதிக புரதச் சத்து, சோயாபீன் மாவு, சோளம் மற்றும் கோதுமை மாவு, பால் மாவு, உலர் பழங்கள், சுக்ரோஸ், எள்ளு மற்றும் பிற வெதுப்பக மேம்படுத்திகள் இணைக்கப்பட்டுள்ளதுடன், இது விசேடமாக குழந்தைகளுக்கு போஷாக்கிலான உணவொன்றாகும்.

உடனடி அரிசியின் தொழில்நுட்பக் கைமாற்றம் மற்றும் EZY RICEஆக வர்த்தகமயப்படுத்தல்

விரைவாகச் சமைக்கும் அரிசி தானியங்களினதும்/உடனடி அரிசி தயாரிப்புகளினதும் தொழில்நுட்பம் கை.தொ.நி.ஆல் உருவாக்கப்பட்டதுடன், கீல்ஸ் .்பூட் புராடக்ட்ஸ் PLCக்கு கைமாற்றப்பட்டது. உள்நாட்டில் விளையும் சாதாரண அரிசி தானியங்கள் 5 நிமிடங்களுக்குள் முழுமையாக சமைக்கப்படும் வகையில் புதுமையான முறையில் பௌதீகரிதியாக பரிகரிக்கப்பட்டது. இரசாயனங்கள் எதுவும் சேர்க்காமல் இந்த தொழில்நுட்பத்தால் அரிசி தானியங்களின் நீர் உறிஞ்சும் விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. விரைவாக சமைக்கும் அரிசி தானியங்களில் பல்வேறு காரமான கலவைகள் சேர்க்கப்படுவதுடன், இந்த உடனடி அரிசி நான்கு சுவைகளுடன் EZY RICE தயாரிப்பாக வணிகமயமாக்கப்பட்டது. இந்தத் தயாரிப்பு செப்டெம்பர் 2019இல் கீல்ஸ் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இப்போது பெரும் சந்தைகளிலும் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகளிலும் அரிசி உணவை ருசிப்பதற்கான எளிதான வழியாக பிரபலமடைந்து வருகிறது.

KASPER தொழில்நுட்பம் மீதான உரிம ஒப்பந்தம்

மூன்று ஆண்டுகளுக்கு APIC அக்ரோ பிரைவேட் லிமிடெட் உடன கித்துல் தீவிரப்படுத்தலின் உற்பத்திக்கும் மற்றும் சாறு உற்பத்தியை மேம்படுத்தும் வினைப்பொருட்கள் உற்பத்திக்கும் KASPER தொழில்நுட்பத்தைத் தொடர்வதற்கான ஓர் உரிம ஒப்பந்தம் கைச்சாத்தானது. நாடு முழுவதும் ஒரே விநியோகஸ்தராக IDB வலையமைப்பு மூலம் KASPER தயாரிப்புகளைச் சந்தைப்படுத்த IDBஇன் சேவையில் ஈடுபட, கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் (IDB) தொடர ஒரு மேலதிக உரிம ஒப்பந்தம் கைச்சாத்தானது.

கித்துல் பானத்தினதும், இனிப்புக் கள்ளினதும் தொழில்நுட்பத்திற்கான வெளிப்படுத்தாத ஒப்பந்தம்

உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைக்காக அக்ரி தேஷியா (பிரைவேட்) லிமிடெட் உடன் மதுபான கித்துல் பானம், இனிப்புக் கள்ளு ஆகியவற்றின் தொழில்நுட்பத்திற்காக வெளிப்படுத்தாத ஒப்பந்தம் கைச்சாத்தானது. கித்துல் இனிப்புக் கள்ளு அதன் உண்மையான சுவையுடனும் மற்றும் அதன் ஆரோக்கிய நன்மைகளுடனும் சுத்தமான கித்துல் சாறில் இருந்து உருவாக்கப்பட்டது. இந்த உற்பத்தி அனைத்து சர்வதேச தரத்திலான தரநிலைகள் மற்றும் உயர்நிலை ஏற்றுமதி சந்தைகளுக்கான தயாரிப்பு புறவரைத் தேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்கிறது என்பதுடன், ஏற்றுமதிச் சந்தைக்கான சாத்தியமான செயல்பாட்டு பானமாகவும் விளங்குகிறது.

மாற்றியமைக்கப்பட்ட தென்னை நார் மரச்சோறு தொழில்நுட்பக் கைமாற்றத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாற்றியமைக்கப்பட்ட நார் மரச்சோறு அடிப்படைப் பொருளினதும் மற்றும் அதன் பிரயோகத் தயாரிப்புகளினதும் தொழில்நுட்பத்தை மாற்றுவதற்கு தப்ரபேன் இன்டர்நேஷனல் லிமிடெட் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

விசேடமாக, விதாத மையங்கள் மற்றும் விதாத தொழில்முனைவோர் மூலம் கிராமப்புற கைத்தொழிலை ஊக்குவிப்பில் நுண் தொழில்கள் (MEs) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் (SMEs) ஆகியவற்றின் ஈடுபாட்டையும் மற்றும் இயங்குசெயல்பாடுகளையும் உருவாக்குவதற்கான/ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்பங்களை கை.தொ.நி. தொடர்ந்து வழங்கி வந்தது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், 50க்கும் மேற்பட்ட தொழில்நுட்பங்கள் மேற்கண்ட தொழில்முனைவோருக்கு மாற்றப்பட்டன. தேசியக் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்களுக்கும் பயிற்சி மூலம் தொழில்நுட்பங்கள் கைமாற்றப்பட்டன. பரிமாறத் தயாராக இருக்கும் பானங்கள், சவ்வூடுபரவல் நீரிழப்புப் பழங்கள், மூலிகை அழகுசாதனப் பொருட்கள் மற்றும் திரவ சவர்க்காரம் உள்ளிட்ட வீட்டுப் பராமரிப்புப் பொருட்கள் போன்ற மாற்றப்பட்ட தொழில்நுட்பங்களில் அதிக தேவை இருந்தது. 'ரட்ட வெனுவென் எகட்ட ஹிட்டிமு' திட்டத்தின் கீழ், ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மொனராகலை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களில் தொழில்நுட்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கை.தொ.நி. நடத்தியது.

4.2 ஆராய்ச்சி, முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம்

அரசாங்கத்திற்குச் சொந்தமான முன்னணி தேசிய மற்றும் மிகப்பாரிய விஞ்ஞானரீதியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பாக கை.தொ.நி.ஆனது, இலங்கை மற்றும் உலகம் என இரண்டிலும் அரசாங்கம், ஆராய்ச்சி வலையமைப்பு, கைத்தொழில் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றும் முழு நாட்டிற்கும் தொழில்நுட்பப் புத்தாக்கத்தை வழங்குவதற்கான் முக்கிய நோக்கத்தை வழங்குவதைத் தொடர்கிறது.

2019ஆம் ஆண்டில், அறுபத்து மூன்று தற்போதைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொழில் மற்றும் நுகர்வோர் தேவையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் திட்டங்கள் உணவு, சுகாதாரம், உயிரக-தொழில்நுட்பம், பொருள், சூழல், இயற்கை வளங்கள், அளவியல், மின் தொழில்நுட்பம் மற்றும் எதிர்காலத் தொழில்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கியிருந்தன. 500க்கும் மேற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்களைக் கை.தொ.நி. வெற்றிகரமாக நிவர்த்தி செய்ததுடன், கைத்தொழிலுக்கும் மற்றும் சமூகத்திற்கும் தீர்வுகளையும் வழங்கியது. நுண்ணலை நீர்-பரவுகை மற்றும் புவியீர்ப்பு ஆகிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குதிரைவாலி அடிப்படையிலான பொருட்கள், கித்துல் சார்ந்த பொருட்கள், தானியங்கள் சார்ந்த

பொருட்கள் மற்றும் மருத்துவத் தாவர அடிப்படையிலான மூலிகை மருந்துகள், இயற்கை வாசனைத்திரவியங்கள், சாறுகள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்கள் போன்ற உணவுப் பொருட்கள், ஒப்பனை மற்றும் உணவுத் துறையில், உயிரக-பூச்சிக்கொல்லிகள், சுத்திகரிக்கப்பட்ட காரீயம், கிராபெனின், குறைக்கப்பட்ட கிராபென் ஒட்சைட் மற்றும் காரீயம் கலவைகள் மற்றும் நீர் மற்றும் தேன், தரம் கண்டறிதல் கருவியில் இருந்து கடினத்தன்மை மற்றும் பிற மாசுபடுத்திகளை அகற்ற கனிமங்களுடன் மாற்றியமைக்கப்பட்ட களிமண் ஆகியன உட்பட வர்த்தகமயமாக்கும் பல தொழில்நுட்பங்கள் இந்தத் திட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்டன

4.2.1 தொழில்நுட்ப முன்னேற்றம்

தேனின் தரத்தைக் கண்டறிதல் பொட்டளி

கள மட்டத்தில் தேனின் தரத்தைச் சோதிக்க விவசாயிகளுக்கு உதவும் எளிமையானதும், விரைவான குறைந்த ஆகுசெலவிலானதுமான தேனின் தரத்தைக் கண்டறியும் சோதனைக் கருவி உருவாக்கப்பட்டது. இலங்கையில் தேனின் தரமானது சேமிப்பு நேரம், வெப்பநிலை, கலப்படம் மற்றும் ஈரப்பதன் போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்ததாகும். எனவே, கள மட்டத்தில் கலப்படம், சர்க்கரை மற்றும் ஹைட்ராக்ஸிமெதைல்.்பர்.்புரல் (HMF) ஆகியவற்றைக் கண்டறிவதற்கு பயனுள்ளதும் மற்றும் விரைவானதுமான தரமான நுட்பம் தேவைப்படுகிறது. மனித நுகர்வுக்கான தேன் SLS 464:2016 தரத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்று இலங்கை தர நிர்ணய நிறுவனம் கட்டயாப்படுத்துகிறது. ஆய்வகங்களில் நடத்தப்படும் தரச் சோதனையின் தற்போதைய நெறிமுறை நேரத்தைச் செலவழிக்கிறது மற்றும் விவசாயிகள் மாதிரியை பெயர்ப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறைந்த நேரத்தில் தேனை நம்பகமானதும் மற்றும் செலவு குறைந்த தரமானதுமான திரையிடலை விருத்தி செய்யப்பட்ட துரித சோதனைப் பொட்டளி வழங்குவதுடன், தேன் உயர் தரமான தயாரிப்பு என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

இரைச்சல் அளவு சோதனைக்கான முறையின் முன்னேற்றம்
WHO வழிகாட்டுதல்களின்படி, உற்பத்தி கைத்தொழில்களில் உற்பத்திச் சூழலொன்றில் அதிக இரைச்சல் மட்டத்திற்கு ஊழியர்களை வெளிப்படுவது அனுமதிக்கப்படாது. எனவே, கைத்தொழில் இரைச்சல் கட்டுப்பாட்டுக்காக உற்பத்தி நிறுவனங்களில் ஒலி வெளிப்பாடு அளவைக் கண்காணிக்க வேண்டும் என்பதுடன், ஊழியர்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இரைச்சல் வெளிப்பாடு அளவிடுதல் என்பது நேரத்தை எடுத்துக்கொள்ளும் பணியாகும். தொழில்சார் இரைச்சல் வெளிப்பாட்டிற்காக கைத்தொழில்களில் இரைச்சல் அளவை அளவிடுவதற்கான துரித முறையை கை.தொ.நி. உருவாக்கியுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட முறை ஒரு முன்னணி உற்பத்தி நிறுவனத்தில் அளவீடுகளைச் செய்வதன் மூலம் சோதிக்கப்பட்டது மற்றும் சரிபார்க்கப்பட்டது.

இறப்பரின் வெப்பக் கடத்துத்திறனை மேம்படுத்துதல்
போட்டிக்குரிய உலக சந்தையில் குறைந்த உருட்டல் எதிர்ப்புக்கும் மற்றும் அதிக தளர்ச்சி எதிர்ப்புக்கும் திடமான டயர்களின் செயல்திறன் முன்னேற்றமடைந்துள்ளது. சிராய்ப்பு எதிர்ப்பு, இழுவை மற்றும் உருட்டல் எதிர்ப்பு ஆகியவற்றை மேம்படுத்த இறப்பர் சரியாக இணைக்கப்பட வேண்டும். காரீயத்தைப் பயன்படுத்தி இறப்பரின் வெப்ப கடத்துத்திறனை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. காரீயத்தை/இறப்பரைப் பயன்படுத்தி கலவைகள் தயாரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டன. உயர் வெப்பக் கடத்துத்திறன் மற்றும் உகந்த கலவையில் நல்ல இயந்திர பண்புகள் கொண்ட ஒரு இறப்பர்/காரீய நனோ கலவை உருவாக்கப்பட்டது. பொறிமுறை துணிக்கைச் சோதனைக்காக கைத்தொழிலுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இயற்கையான குவார்ட்ஸை சூரிய-தரத்திலான சிலிக்கானாக மாற்றுதல்
தாதுக்கள் போன்ற உள்நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களுக்கு மதிப்புக் கூட்டல் முன்னோடியில்லாதது என்பதுடன், இது நாட்டிற்கு ஒரு பரந்த அளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான வழியையும் வழங்குகிறது. கை.தொ.நி. ஆனது இயற்கையான படிகக்கல்லை சூரிய-தர சிலிக்கனாக மாற்றுவதற்கான மேம்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தைத்

தொடங்கியுள்ளதுடன், இது மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்பு ஆகும். மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், சூரிய-தர சிலிக்கனின் பிரித்தெடுப்பினை இயலச்செய்யும் மின்-இரசாயன எதிர்வினைகளைத் தொடங்குவதற்கு கடைசி கட்டத்திற்கான சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உயர்தர கிரபெனின்-அடிப்படையிலான பொருளின் உற்பத்தி
காரீயம் என்பது நாட்டில் கிடைக்கும் ஒரு மதிப்புமிக்க இயற்கை வளமாகும் என்பதுடன், தற்போது குறைந்த விலையில் முக்கியமாக மூலப்பொருளாக அல்லது சிறிய மதிப்பு கூட்டுதலுடன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், காரீயத்தில் இருந்து குறைக்கப்பட்ட கிராபென் ஒக்சைட் மற்றும் காரீய ஒக்சைட் ஆகியவற்றின் பாரிய-அளவிலான தொகுப்பு, ஆக்கவுரிமைபெற்ற பல்வேறு புதிய முறைகளைப் பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்திகளாகத் தொடரப்பட்டது.

MI வெப்பநிலை சுரங்கப்பாதைக் கட்டுப்பாட்டு முறைமையின் முன்னேற்றம்
முதல் கட்ட வெப்பநிலை சுரங்கப்பாதை மேம்பாட்டுத் திட்டத்தில், வெப்பநிலைக் கண்காணிப்பு முறைமை உருவாக்கப்பட்டு, நிறுவப்பட்டு, இயக்கப்பட்டது. முறைமை கண்காணிக்கப்பட்டு, சீரான செயல்பாட்டிற்காக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், வெப்பநிலைச் சாய்வுக் கட்டுப்பாட்டு முறைமையின் முன்னேற்றம், சுரங்கப்பாதையில் உள்ள சூடான காற்றை அகற்றவும், வெப்பநிலையைக் குறைக்கவும் இரண்டு கைத்தொழில்சார் காற்றாடிகளை இயக்குவதற்கு ஒரு தனிக் கட்டுப்பாட்டு முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது.

SMART விற்பனை இயந்திரத்தின் முன்னேற்றம்
ஒரு பொறியியல் நிறுவனத்தின் கோரிக்கையின் பேரில், சாதாரண தேனீர் மற்றும் கோப்பி விற்பனை இயந்திரத்தை SMART விற்பனை இயந்திரமாக தரமுயர்த்துவதை கை.தொ.நி. பொறுப்பேற்றது. SMART விற்பனை இயந்திரம் தானாகவே பானங்களை வழங்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன், சேய்மை வழங்கியொன்றுக்கு அதன் விநியோக நிலையை ஒன்லைனில் புதுப்பிக்கும் திறனையும் கொண்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ், முழு அரை தானியங்கி இயந்திரமும் புதுப்பிக்கப்பட்டு, தேவையான கட்டுப்பாட்டு முறைமைகளுடன் தானியங்கி கோப்பை விநியோக முறைமை மற்றும் கோப்பை நிரப்புதல் முறைமை ஆகியன மீள்-வடிவமைப்பு செய்யப்பட வேண்டும். முறைமை இப்போது கட்டுமான கட்டத்தின் கீழ் உள்ளது. கணினியை SMART கொடுப்பனவு நுழைவாயிலுடன் இணைக்கவும் மற்றும் பொதுவான ஏற்பாட்டியல் வலையமைப்புடன் இணைக்கவும் மேலும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை பால்பண்ணைகளில் இருந்து நுண்-தாவரங்களின் பல்லுயிர் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்
பால்பண்ணைச் சூழல்களின் நுண்ணுயிர் பன்முகத்தன்மை ஒரு மகத்தான, பெரும்பாலும் பயன்படுத்தப்படாத மரபணு மற்றும் உயிரியல் தொகுதியை முன்வைப்பதுடன், இது புதிய விகாரங்களை மீட்டெடுப்பதற்குப் பயன்படுத்தப்படலாம். பதப்படுத்தப்படாத பாலின் நுண்ணுயிரியல் தரத்தைப் பாதுகாப்பதும் அத்துடன் கட்டுப்படுத்துவதும் உலகளாவிய கரிசனையாக உள்ளது, எனினும், ஒரு சில ஆய்வுகள் மட்டுமே பதப்படுத்தப்படாத பாலின் பாக்டீரியா பல்லுயிர்த்தன்மையை ஆய்வு செய்துள்ளன என்பதுடன், ஆரோக்கியம் மற்றும் நோய்களில் அவற்றின் பங்கு ஆகியன குறித்து பல கேள்விகள் நிலவுகின்றன. இலங்கையின் பால்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பதப்படுத்தப்படாத பாலின் நுண்ணுயிர் பன்முகத்தன்மையை ஆராய்வதற்காக ஓர் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் அடையாளங்காணப்பட்ட செயல்பாட்டு மற்றும் கைத்தொழில் திறன்களைக் கொண்ட நன்மை பயக்கும் நுண்ணுயிரிகள், கை.தொ.நி.இன் உணவுத் தொழில்நுட்பப் பிரிவில் ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில் பயன்பாடுகளுக்கான உண்மையான பால் நுண்ணுயிர் வளர்ப்புகளின் இலங்கையின் முதல் வைப்பகத்தை நிறுவுவதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளன.

4.2.2 கைமாற்றத்திற்குத் தயாரான தொழில்நுட்பம்

மக்கும் உணவுக் கழிவுகளை ஒரே நாளில் உரமாக்க வீட்டு உரமாக்கி

மக்கும் குப்பைகளை உள்நாட்டு அளவில் நிர்வகிக்கும் முறைமையானது, வீட்டிலேயே உணவுக் கழிவுகளை நிர்வகிக்க ஒரு சிறந்த தீர்வாக இருக்கும். சமையலறைக் கழிவுகளை மக்கும் முறைமையொன்றாக உருவாக்கும் நோக்கத்துடன், ஒரு வீட்டு உரமாக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. கழிவுகளை 24 மணி நேரத்திற்குள் உரமாக்க உரமாக்கியினால் முடியும்.

உற்பத்தி செய்யப்படும் உரத்தின் C/N விகிதம், சேதனப் பொருள் உள்ளடக்கம், ஈரப்பதன் மற்றும் pH ஆகியவை தரமான உரத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகளில் உள்ளன. தொழில்நுட்பத்தின் விரிவாக்கம் முடிக்கப்பட்டு, வர்த்தகமயமாக்கலுக்காக காத்திருக்கிறது. கவர்ச்சிகரமான வகையில் வடிவமைக்கப்பட்ட இலகுரக வாடிக்கையாளர் சார்ந்த வர்த்தகமய இயந்திரத்தை உருவாக்குவது திட்டத்தின் அடுத்த நோக்காகும்.

குதிரைவாலியில் இருந்து போஷாக்கிலான உணவு உற்பத்திகள்

பருப்பு வகைகளின் செயல்பாட்டு பண்புகளைச் சோதிப்பதில் மிகவும் சத்தானது என குறைத்து பயன்படுத்தப்படும் பருப்பு வகையொன்றான குதிரைவாலி (*Macrotyloma uniflorum*) அடையாளம் காணப்பட்டுள்ளது. இது புரதம், நார்ச்சத்து, தாதுக்கள் மற்றும் எதிர்ப்பு மாவுச்சத்து ஆகியவற்றில் நிறைந்துள்ளதுடன், குறைந்த கிளைசெமிக் குறியீட்டு மற்றும் ஒட்சிசனெதிரி பண்புகளையும் கொண்டுள்ளது. ஆறு பொருட்கள் குதிரைவாலி அடிப்படையிலான கிரானோலா துண்டம், குதிரைவாலி அடிப்படையிலான சத்தான உடனடி கஞ்சி, குதிரைவாலி அடிப்படையிலான சத்தான உடனடி தூள் பானம், குதிரைவாலி அடிப்படையிலான அனைத்து நோக்கம் கொண்ட மாவு, குதிரைவாலி அடிப்படையிலான சத்தான பானம் (RTS) மற்றும் குதிரைவாலி அடிப்படையிலான சத்தான செதில்களின் கலவை ஆகியன விருத்தி செய்யப்பட்டன. ஆறு தயாரிப்புகளின் அருகாமை கலவை மற்றும் உணவு நார்ச்சத்து உள்ளடக்கம் ஆகியன மேற்கொள்ளப்பட்டதுடன், தயாரிப்புகள் வர்த்தகமயமாக்கலுக்கு கிடைக்கின்றன.

ஒலு விதைகள் ஒன்றிணைக்கப்பட்ட உணவு உற்பத்திகள்

'ஒலு' (*Nymphaea pubescens* Willd) என்பது தண்ணீரில் வளர்க்கப்படும் ஒரு தாவரமாகும் என்பதுடன், விதைகள் பாரம்பரியமாக கஞ்சி தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. விதைகளில் போஷாக்குகள் மற்றும் நார்ச்சத்து அதிகம் உள்ளதுடன், இது செரிமான முறைமைக்கு உதவுவதுடன், கொழுப்பின் அளவையும் குறைக்கிறது. இரண்டு தயாரிப்புகளும், ஆரோக்கியமான/குறைந்த கலோரி போஷாக்கு நிறைந்த உணவுப் பட்டியலில் கொப்பளிக்கப்பட்ட ஒலு விதைகளுடனும் மற்றும் ஒலு விதை மாவுடனும் இணைக்கப்பட்ட உடனடி சரமாரி மாவு கலவையாக உருவாக்கப்பட்டுள்ளது. தயாரிப்புகளின் ஊட்டச்சத்து மற்றும் உயிரகதீவிரப் பண்புகள் ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டதுடன், வர்தகமயமாக்கலுக்கு தொழில்நுட்பம் கிடைக்கிறது.

உயிரகதீவிர தாவர சாற்றைப் பயன்படுத்தி அழற்சி எதிர்ப்பு கூழ் சூத்திரிப்பு

